[8th March 1969

Supervisors of Municipal Elementary Schools

* 161 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the raised age of superannuation of 58 is applicable to Supervisors of Municipal Elementary Schools; and

(b) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) எழவில்லை.

Hindi Teachers

* 162 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether alternative employment will be provided to the Hindi Teachers who have lost their jobs as a result of the language policy of the Tamil Nadu Government;

(b) the amount of expenditure incurred on these teachers in 1967–68; and

(c) the amount of grant sanctioned therefor by the Central Government in 1967-68?

இந்தி ஆசிரியர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு மொழிக் கொள்கையினல் வேலை இழந்த இந்தி ஆசிரியர்களுக்கு வேறு வேலை அளிக்கப்படுமா ?

(இ) இவர்களுக்கு 1967-68-ஆம் நிதி ஆண்டில் எவ்வளவு செலவானது ?

(உ) மத்திய சர்க்கார் இதற்காக 1967-68-ஆம் நிதி ஆண்டில் உதவியது எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ் மாதவன் : (அ) ஆம்.

(இ) ரூ. 38,38,582.

(உ) அதிக ஆசிரியர்களை நியமித்ததின் விளைவாக ஏற்பட்ட செலவாகிய ரூ. 60,814-க்கு இந்திய அரசிடமிருந்து உதவித் தொகை கோரப்பட்டுள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, நிரந்தரமாக்கப்பட்ட இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்படுவதாகக் கூறினர்கள். இரண்டு மூன்று வருஷங்களாக வேலை தொடர்ந்து பார்த்து வரும் ஆனல் நிரந்தரம் பெருத இந்தி ஆசிரியர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் 1,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில்,

8th March 1969]

வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் வேலைத் தேடித் தருவதில் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் அப்படிச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மொத்தம் 2,331 ஆசிரியர்கள். யார் யார் வேலைக்குத் தக்க குவாலிபிகேஷன் பெற்றிருக்கிறார்களோ அவர்களில் 1,279 பேர்களுக்கு வேறு தொழிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 175 பேர் இதே தொழிலில் Language Teacher. என்ற முறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். temporary ஆக இடைக்காலமாக appointment பெற்றவர்கள், குவாலிபிகேஷன் இல்லாதவர்கள், unqualified Category -ல் வருகிறவர்கள் 667 பேர்கள். அவர்களுக்குக் கூட வாய்ப்பு கிடைக்கிற இடங்களில் வேலை கொடுக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பித்திருக்கிறோம். 14 பேருக்கு அதிலும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Hindi Schools

* 163 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the policy of the Tamil Nadu Government with regard to the opening of Hindi Schools in Tamil Nadu by the Central Government?

இந்தி பள்ளிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மத்திய அரசு தமிழகத்தில் இந்தி பள்ளிகள் திறப்பதில் தமிழக அரசின் கொள்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தமிழகத்தில், இந்தி பள்ளிகள் திறப்பதற்கான திட்டம் ஏதும் மத்திய அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தட்சிண பாரத இந்தி பிரசார சபை மூலமாக இந்திப் பள்ளி திறப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ? தட்சிண பாரத இந்தி பிரசார சபை செலவில் மத்திய சர்க்கார் அமைத்துக் கொள்வதில் இந்த அரசுக்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மத்திய அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாகப் பேசினார். தங்கள் அரசாங்கத்தில் எதுவும் திட்டம் இருப்பதாகச் சொல்லவில்லை. இந்தி பிரசார சபா இந்திப் பள்ளிகளை, பாடங்களை விரிவு படுத்துவதற்கு, எந்த முறையில் செய்கிறார்களோ அதைப் பொருத்து இந்த அரசாங்கம் முடிவு செய்யும்.